**செ. கு. எண்:039** **நாள்: 07.04.2017**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

## அறிக்கை – 7.4.2017

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், துருவை கிராமத்தில் வெடி பொருள் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிவகாசியைச் சேர்ந்த திரு. சுப்ரமணியன் என்பவரின் மகன் திரு.முத்து, திரு. அரிபுத்திரி என்பவரின் மகன் திரு. பாலமுருகன், திரு. மணி என்பவரின் மகன் திரு.அருண்குமார், விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தைச் சேர்ந்த திரு. மண்ணாங்கட்டி என்பவரின் மகன் திரு. ஏழுமலை மற்றும் திரு சந்திரன் என்பவரின் மகன் திரு.கோபால் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், செவல்பட்டி கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் திரு. சின்னச்சாமி என்பவரின் மகன் திரு. அய்யப்பன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கங்கரக்கோட்டை கிராமத்தில் இயங்கி வரும் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில், அங்கு பணியிலிருந்த எழுமிச்சங்காபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியாண்டி என்பவரின் மனைவி திருமதி சரஸ்வதி, திரு. முனியாண்டி என்பவரின் மனைவி திருமதி சுப்புத்தாய், திரு. மாடசாமி என்பவரின் மனைவி திருமதி செல்வி, திரு. பழனிராஜ் என்பவரின் மனைவி திருமதி முத்துமாரி, திரு முருகேசன் என்பவரின் மகன் திரு மாமுனிராஜ், திரு தம்பிராஜ் என்பவரின் மனைவி திருமதி வீரலட்சுமி, திரு முனியாண்டி என்பவரின் மகன் திரு. சூரியநாராயணசாமி மற்றும் திரு. தாவீது என்பவரின் மகன் திரு. செல்வராஜ் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கங்கரக்கோட்டை கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் பனையடிபட்டியைச் சேர்ந்த திரு. மனுவேல் என்பவரின் மகன் திரு.சேகர் மற்றும் நடுச்சூரங்குடியைச் சேர்ந்த திரு வைரவன் என்பவரின் மகன் திரு.கணேசன் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெற்றிலையூரணி கிராமத்தில் இயங்கி வரும் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில், அங்கு பணியிலிருந்த வெற்றிலையூரணியைச் சேர்ந்த திரு. இன்னாசிமுத்து என்பவரின் மகன் திரு.பவுல்ராஜ், திரு. சங்கர் என்பவரின் மனைவி திருமதி முருகேஸ்வரி, திரு. ஆபிரஹாம் என்பவரின் மனைவி திருமதி கலாராணி மற்றும் மேலஒட்டம்பட்டியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. சண்முகவேல், கீழ கோதைநாச்சியார்புரத்தைச் சேர்ந்த திரு. முனியசாமி என்பவரின் மனைவி திருமதி விஜயா ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், கீழத்திருத்தங்கல் கிராமம், புதுவை நகரில் பட்டாசு தயார் செய்து கொண்டிருந்தபோது ஏற்பட்ட வெடி விபத்தில் திருத்தங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. சஞ்சீவி என்பவரின் மகன் திரு.நாதன், திரு. பூச்சன் என்பவரின் மகன் திரு அய்யப்பன், திரு ராமர் என்பவரின் மகன் திரு. ஜெயின் ஜெயபால், திரு. நாகராஜ் என்பவரின் மகன் திரு. முத்துப்பாண்டி மற்றும் திரு. ஞானபிரகாஷ் என்பவரின் மகன் திரு.மாரியப்பன் ஆகியோர் உயிரிந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட துயர நிகழ்வுகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு அவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/-ரூபாயும்; சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/-ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**